# மன்னிக்கப்படாத பாவம்

போதகர் PV. Jesudas

கர்த்தர் உங்களை பெருக்கமாக ஆசீர்வதிப்பாராக !

**1945** –ஆம் ஆண்டிலே இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அந்த யுத்தத்தில் அமெரிக்கர்கள் ஜப்பான் நாட்டிலே ஈரோஷிமா, நாகஸாகி என்ற இரண்டு பட்டணங்களிலே இரண்டு அணுகுண்டுகளை



போட்டதன் காரணத்தினாலே, அந்த இரண்டாம் யுத்தம் முடிவு நிலைக்கு வந்தது. இந்த உலகத்தின் வரலாறிலேயே முதன் முதலாக போடப்பட்ட அந்த அணுகுண்டு இன்றுவரை எந்த விதத்திலும் உபயோகப்படுத்தப்படவில்லை. அவைகள் பத்திரமாக தயாரிக்கப்பட்டு பெறும் யுத்தத்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு பெரிய நகரங்கள் பெறும் தொழிற்சாலைகள் நிறைந்ததாக இருந்தது. அந்த நகரங்களை அழித்து ஜப்பானின் வல்லரசு தன்மையை அழித்துவிடவேண்டும் என்று அமெரிக்கர்கள் இந்த காரியத்தை செய்தார்கள். அந்த அணுகுண்டு களை போட்டவுடனேயே பயங்கரமான புகை எழும்பி எத்தனையோ மைல்தூரம் பரவி இலட்சக்கணக்கான மக்களை அழித்தது. பெரிய கட்டடங்கள் யாவும் தூள் தூளானது.



இலட்சக்கணக்கான மக்கள் அந்த அணு கதிர் இயக்கத்தினாலே ஊனமுற்றவர்களாகவும் வியாதிப்பிடித்தவர்களாகவும் ஆனார்கள். அந்த இரண்டு பட்டணங்கள் இந்த நிலமைக்கு ஆனதால், அமெரிக்கா நாட்டிலே பெறும் எதிர்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது சில பத்திரிக்கைகள் எழுதினதாவது: அமெரிக்கர்களாகிய நீங்கள் அந்த அணுகுண்டைபோட்டு இலட்சக்கணக்கான மக்களை அழித்து வியாதிப்படுத்திவிட்டிர்கள். ஆகவே நீங்கள் செய்தது மன்னிக்கமுடியாத குற்றம். கடவுளாலேயும் இந்த பாவத்தை மன்னிக்கவேமுடியாது என்று அநேக பத்திரிக்கைகள் எழுதினது.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! இன்றைக்கு நாம் மன்னிக்கக்கூடாத பாவத்தை செய்துவிட்டோமா?

**ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப்பாவமும் எந்தத் தூஷணமும் மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.** - மத்தேயு 12: 31, 32.

ஆகவே இந்த இரண்டு வசனங்களும் நமக்கு பெறும் பயத்தை உண்டுப்பண்ணுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வுக்கு விரோதமாக நாம் என்ன சொன்னாலும் அது நமக்கு மன்னிக்கப்படுகிறது. ஆனால் தேவ ஆவியானவருக்கு விரோதமாக நாம் எதை சொன்னாலும் அது இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை.

**மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல்செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கு மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்.** -1யோவான் 5: 16

இங்கு யோவான் மரணத்திற்கு ஏதுவான பாவம் என்றும் மரணத்திற்கு ஏதுவல்லாத பாவம் என்றும் பேசுகிறார். இங்கு மரணம் என்று சொல்லப்படும் அர்த்தம் நித்திய மரணத்தை குறிக்கிறது. அதாவது ஆண்டவர் வரும்போது பாவிகள் நித்தியமாக ஆக்கினைக்குட்படுத்தப்பட்டு மரணம் அடைவதை பற்றிக்கூறப்படுகிறது.

பாவத்தைக் குறித்து நாம் சிந்திக்கிறோம் ஆனால் மன்னிக் கப்படாதப் பாவத்தைக் குறித்து சிந்திக்கிறோமா? நம்முடைய வாழ்க்கையில் நாம் இந்த மன்னிக்கப்படாத பாவத்தை செய்து

விட்டோமென்றால் பிறகு நமக்கு மன்னிப்பு ஏது? மரிக்கவேண்டியதே தவிர வேறு என்ன வழி இருக்கிறது? மகமதியர்கள் சிலை வணக்கத்தை ஒரு பெரிய பாவம் என்று கருதுகிறார்கள். கிறிஸ்தவர்கள் விபசாரத்தை ஒரு பெரிய பாவம் என்று கருதுகிறார்கள். புத்தர் சமுதாயத்திலே உயிர்களை கொல்லுவது ஒரு பெரிய பாவம் என்று கருதுகிறார்கள். உலகத்தில் இப்படி பல்வேறு வகையாக சொல்லப்பட்டிருக்கிறது. பேதுரு இயேசுவோடு நெருங்கி பழகியும் அவரை எனக்கு தெரியாது என்று மூன்று முறை மறுதலித்ததுமட்டுமல்லாமல் ஆணையிடவும் செய் தான். ஆனாலும் அவன் மனுஷகுமாரனுக்கு முன்பாக மறுதலித்தேனே என்று மனங்கசந்து அழுதான். பிறகு இயேசு

2

பேதுருவை பார்த்து, பேதுருவே நீ என்னை நேசிக்கிறாயா? என்று மூன்று முறை கேட்டார். பேதுருவும் ஆம் ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்றான். ஆகவே இயேசு இங்கு மூன்று முறை அவனை மன்னித்தார். இன்றைக்கு ரோமன் கத்தோலிக்க ஆராதனையின் முக்கியத்துவம் என்னவென்றால் மன்னிப்பு என்ற கொள்கையை சுற்றிதான் அந்த சபை இயங்கி வருகிறது. மனுஷனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் இறைவன் அதற்கு மன்னிப்பை தருகிறார் என்ற அந்த விசேஷ மான கோட்பாடுகளினால்தான் அவர்கள் அந்த பாவமன்னிப்பின் அறிக்கை செய்கிறார்கள்.

வழக்காடுவோம் வாருங்கள் என்று **கர்த்தர்** சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். ஏசாயா 1. 18

ஆண்டவர் நம்மை வழக்காட கூப்பிடுகிறார். இந்த உலகத்தின் மக்களுக்கும் ஆண்டவருக்கும் வழக்கு இருக்கிறது. இறைவன் நம்மடைய பாவங்கள் எல்லாவற்றையும் மன்னிக்க வல்லவரா யிருக்கிறார். நம்முடைய பாவங்கள் இரத்தாம்பர சிவப்பாக இருந்தாலும் வெண்மையாக மாறும் என்று ஆண்டவர் சொல் லுகிறார். திருமறை பாவ மன்னிப்பைபற்றி அதிக முறை பேசுகிறது.

பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை. ஏசாயா 45. 22

உலகத்திலுள்ள யாவரும் என்னை நோக்கி பாருங்கள் அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இன்றைக்கு மக்கள் மற்றவர்கள் செய்கின்ற குற்றங் களையும் குறைகளையும் மறப்பதே கிடையாது. கணவன் செய்த குற்றத்தை மனைவி மறப்பதில்லை, மனைவி செய்த குற்றத்தை கணவன் மறப்பதில்லை. பிள்ளைகள் செய்த குற்றத்தை பெற்றவர்கள் மறப்பதில்லை. பெற்றவர்கள் செய்த குற்றத்தை பிள்ளைகள் மறப்பதில்லை. இறைவனுடைய மன்னிப்பை நாம் மற்றவர்களுக்கு மன்னிக்கும்போது கிடைக்கிறது . உன்னுடைய பாவங்களை நான் மறந்துபோவேன் என்று ஆண்டவர் சொன்னார்.

ஒரு நாஸ்தீக டாக்டருக்கு மாமனார் இருந்தார். அந்த மாமனார் எப்பொழுதும் அல்லேலுயா *ப்ரைஸ் தெ லாட்* என்று சொல்லி கொண்டிருப்பார். இந்த டாக்டருக்கு ரொம்ப எரிச்சல் வந்தது. ஒரு நாள் அந்த டாக்டர் ஒரு விஞ்ஞான புத்தகத்தை அந்த மாம னாரிடம் கொடுத்து தான் நிம்மதியாக இருக்க அந்த புத்தகத்தை படிக்க கொடுத்தார். படித்துக்கொண்டிருந்த அந்த மாமனார் திடிரென்று *ப்ரைஸ் தெ லாட்* என்று ஒரே சத்தம் போட்டுவிட்டார். அதற்கு அந்த மருமகன் இப்படி சத்தம் போட்டதற்கு அந்த புத்தகத்தில் என்னதான் இருக்கிறது என்று கேட்டதற்கு அந்த மாமனார் பசிபிக் மகா சமுத்திரத்தின் ஆழம் 5 மைலாக இருக்கிறது. அவ்வளவு பெரிய ஆழத்தில் என் பாவங்களை ஆண்டவர் போட்டுவிடுவார் அது மேலே கொஞ்சமும் வராது என்று சொன்னார்.

3

நம்முடைய பாவங்கள் எவ்வளவு ஆழமாக இருந்தாலும் ஆண்டவர் அவைகளை மன்னிக்க சித்தமாயிருக்கிறார்.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவான் 1. 9

நம்முடைய பாவங்களை மனிதர்களிடத்திலே அறிக்கை யிடாமல் தேவனிடத்திலே அறிக்கையிடவேண்டும். அப்படி உண்மையாக நாம் அறிக்கையிட்டால் ஆண்டவர் மன்னிக் கிறார் என்று வேதம் சொல்லுகிறது.

நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் **கர்த்தருக்கு** அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.(சேலா.) சங்கீதம் 32. 5

நம்முடைய அக்கிரமத்தை தேவனிடம் மறைக்ககூடாது.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதி 28. 13இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது நீ சமாதானத் தோடே போ உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று அடிக்கடி சொன்னார்.

அந்த யூதர்கள் பாவங்களை மன்னிக்கிறதற்கு இவர் யார் என்று கேட்டார்கள். ஆண்டவர் பாவங்களை மன்னிக்கிறதற்கு மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டு என்று இயேசு சொன்னார். அவருடைய பாதத்தின் கீழ் வருகிறவர்களுக்கு ஆண்டவர் மன்னிப்பை கொடுக்கிறார்.

வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும். ஏசாயா 33. 24

**இங்கிருந்து பரலோகத்திற்கு போகும் தேவபிள்ளைகளின் பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டிருக்கும்.**

**ஆகவே இப்படி பாவங்களை மன்னிக்கிறதாகவே பேசும் வேதம் மன்னிக்கப்படாத பாவத்தை குறித்தும் பேசுகிறதே அது என்ன?**

**நமக்கு இருக்கும் பாவக்கடனை தீர்ப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?**

**நம்முடைய பாவங்கள் எப்படி மன்னிக்கப்பட்டது?**

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். **ஏசாயா 53. 4, 5**

**ஆகவே நமக்கு பாவக்கடன் இருக்கிறது. அதற்காக நாம் மரிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் ஆண்டவர் நம்முடைய பாவக்கடனை தீர்த்து அந்த கடனை அவர் சுமந்து அந்த கல்வாறி சிலுவையில் நமது பாவக்கடனை செலுத்தி**



**நமக்காக மரித்தார்.**

ஆதலால், அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார். எபிரேயர் 2. 16

**ஆகவே நம்முடைய பாவக்கடனை அவர் நமக்காக ஏற்றுக்கொண்டு நமக்கு கைகொடுத்தார்.**

**பரிசுத்த ஆவிக்கு விரோதமாக செய்யும் பாவம் என்ன?**

அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப் பைக்குறித் தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். யோவான் 16. 8

**பரிசுத்த ஆவியானவர் நம் மத்தியில் வரும்போது, நம்முடைய பாவத்தை கண்டித்து உணர்த்துகிறார்.**

**பாவத்தை எப்படி கண்டித்து உணர்த்துகிறார்?**

**தேவ ஆவியானவர் மனுஷனுடைய உள்ளங்களிலே பாவத்தை குறித்து உணர்த்தி, அந்த பாவத்தை அறிக்கை செய்ய வேண்டுமென்று சொல்லி, அந்த பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லி, அந்த பாவ மன்னிப்பிற்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் போகவேண்டுமென்று சொல்லி, அந்த பாவம் மன்னிக்கப்பட்டபிறகு அந்த பாவத்தை திரும்பவும் செய்யாமலிருக்கவேண்டும் என்று சொல்லி, மனித னுடைய உள்ளத்திலே கிரியை செய்துகொண்டும் போராடிக் கொண்டிருக்கிறார் என்றும் திருமறை நமக்கு சொல்லுகிறது ஆவியானவர் நம்முடைய உள்ளங்களிலே போராடிக் கொண்டி ருக்கிறார். உலக மக்கள் அனைவரின் மத்தியிலும் பரிசுத்த ஆவியானவர் உணர்த்திக்கொண்டேயிருக்கிறார்.**

இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியையினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. . ரோமர் 3. 20

**பாவத்தை அறிகிற அறிவு நமக்கு இந்த பத்து கற்பனைகளின் மூலமாகதான் வருகிறது. ஆனால் மக்களுக்கு பாவ உணர்வுகள் இருந்தும் அவைகளை விட்டு விலக மனம் வரவில்லை. கற்பனை நமக்கு அறிவை கொடுக்கிறது. பரிசுத்த ஆவியானவரோ நமக்கு உணர்வை கொடுக்கிறார். அவர் நம் உள்ளத்திலே வல்லமையாக போராடி, பாவங்களை பற்றின உணர்வுகளை தம்முடைய பிள்ளை களுக்கு கொடுக்கிறார்.**

**நோவாவின் காலத்திலே இந்த உலகம் அழியபோகிறது என்று அவன் வல்லமையாக பிரசங்கம் பண்ணினான். அவர்கள் உள்ளத் தின் ஆழத்திலே பாய்ந்தது. ஆவியானவர் அந்த மக்களின் உள்ளத்திலே போராடினார்.**

அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சம்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார். ஆதி 6. 3

**ஆனால் மக்கள் தங்கள் இருதயங்களை கடினப்படுத்தி னார்கள். இந்த காலத்திலேயும் ஆவியானவர் வேத வசனங்களின் மூலமாக பேசுகிறார். அப்படி ஆவியானவர் நம்மை கண்டித்து உணர்த்தும்போது நாம் அவருக்கு செவிக்கொடுக்கவேண்டாமா?**



**இப்பொழுது காலம் சமீபித்துவிட்டதால் நமக்கு அதிகமாக எச்சரிப்பு கொடுத்து வருகிறார். அப்படி போராடி கொண்டிருக்கும் ஆவியானவரை நாம் அசட்டைசெய்து விட்டால் நாம் இந்த உலக சாபத்தை உடையவர்களாகவும் நித்திய ஜீவனை இழந்தவர்களாகவும் இருப்போம்.**

**இரட்சிப்பு எப்படி வருகிறது என்று நாம் அறிகிறோமா?**

**ஆவியானவர் நம் உள்ளத்திலே நீ பாவி என்ற உணர்வுகளை கொடுக்கிறார். பாவி என்று நாம் அறிந்து கொண்டவுடனேயே நாம் இயேசு கிறிஸ்துவினிடம் போய் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்கிறோம். பிறகு நாம் திரும்பவும் விழுந்து போகாதபடி ஆவியானவர் நம் உள்ளத்தில் பேசி வேதத்தை சுட்டிகாட்டுகிறார். பிறகு ஆவியானவர் நம்மை பரிசுத்தத்திற்குள் நடத்தி நாம் தேவ முத்திரையை பெற செய்கிறார். இவ்வளவு வேலை செய்கிற அவரை நாம் துக்கப்படுத்தலாமா? மனந்திரும்புதலையும் குணப்படுதலையும் அவர்தான் கொடுக்கிறார். அந்த ஆவி குறிய ஜீவியத்தில் நடப்பதற்கு வல்லமைகளையும்**

அவர்தான் கொடுக்கிறார். நம்முடைய ஜீவியத்தின் கனி களையும் அவர்தான் கொடுக்கிறார். இரட்சிப்பின் பாதை யிலே அவர்தான் நம்மை நடத்துகிறார். பரலோகத்திற்கென்று அவர்தான் நம்மை முத்திரிக்கிறார். ஆகவே நாம் இரட்சிக்கப் படுவதற்கு, அந்த இரட்சிப்பின் திட்டத்திலே ஆவியானவர் எல்லாவிதமான கிரியைகளையும் அவர் செய்து கொண்டிருக் கிறார். அப்படி செய்கிற அவரை நாம் அசட்டை செய்துவிட் டோமானால் நம்மை விட்டுபோய்விடுவார். அவர் மனுஷ னல்ல அவர் தேவன். இன்றைக்கு பரிசுத்த ஆவியானவர் தேவனாய் இருந்து நம்மோடு போராடிக்கொண்டிருக்கிறார். அவரை நாம் விசனப்படுத்தகூடாது. அவரை நாம் குற்றப் படுத்தகூடாது. ஆவியானவர் தேவனாய் இருக்கிறபடியி னாலே நாம் அவருக்கு பயந்து பாவமன்னிப்பை நாம் பெற்றுக்கொண்டு அவருடைய வசனத்தின்படி கீழ்ப்படிய வேண்டும். அவரை துக்கப்படுத்தி விரட்டினால் நமக்கு பாவ உணர்வும் பாவ மன்னிப்பும் இருக்காது. இரட்சிப்பின் வழியும் இருக்காது. நாம் கைவிடப்பட்டவர்களாகி விடு வோம். கடைசிக்காலத்திலே ஆண்டவரே ஆண்டவரே என்று கதறினாலும் ஒரு பலனும் இருக்காது.

அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். எபே. 4.30

சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேெ றாருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். எபிரேயர் 10.26,27



ஆகவே தேவ ஆவியானவரை நாம் அசட்டைப்பண்ண கூடாது. மூடி பிரசங்கியார் பிரசங்கம் பண்ணுகையில்: கஷ்டப்பட்டு இராமுழுவதும் உழைத்து சம்பாதியுங்கள், அந்த சம்பாதிக்கிற பணத்தை யாவும் வங்கியில் போட்டு சேர்த்து வையுங்கள். அங்கு கூட்டத்தில் இருந்து ஒரு வியாபாரிக்கு ஏகப்பட்ட சந்தோஷ மாகிவிட்டது. என்ன அருமையான பிரசங்கமப்பா என்று புகழ்ந்து கொண்டிருந்தார். பிறகு அந்த பிரசங்கியார் அந்த கஷ்ட்டப்பட்ட பணத்தில் எவ்வளவு ஊழியத்திற்கு கொடுக்கமுடியுமோ கொடு ங்கள் என்று சொன்னவுடன் அந்த வியாபாரிக்கு சோகம் தாங்க முடியாமல் போய்விட்டது. நமக்கு பிடித்த காரியங்களை மாத்திரம் எடுத்துக்கொள்கிறோம் ஆனால் ஆண்டவருக்கு பிடித்த காரியம் வரும்போது நாம் அசட்டைப்பண்ணுகிறோம். பார்வோன் எவ்வள வோ தேவ அதிசயங்களை பார்த்தான் ஆனால் அவன் இருதயம் எப்படி கடினப்பட்டது என்று வேதத்தில் வாசிக்கிறோம். அவனுக்கு ஆவியானவர் என் ஜனங்களை போகவிடு என்று பலமுறை சொன்னார். அவன் அந்த சத்தத்திற்கு செவிக்கொடாமல் தன் இருதயத்தை கடினப்படுத்தினான் என்று வேதத்திலே பார்க்கி றோம். இன்று உலகத்தில் அதிகாரம், ஆணவம், செல்வம், இந்த உலகத்தின் செல்வாக்குகளும் நம்முடைய இருதயத்தை கடினப்படுத்திக்கொண்டிருக்கிறது.

வேதத்திலே இன்னொரு பெரிய அரசனை பற்றி படித்திருப் போம். நேபுகாத்நேத்சார் என்ற ராஜா அந்த பார்வோன் மன்னனை போல ஒரு பெரிய மன்னனாக இருந்தான். தேவனுடைய வார்த்தை அவனுக்கு தானியேல் மூலமாக வந்தது. முதலில் அவன் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் பிறகு மனந்தி ரும்பி குணப்பட்டு ஆண்டவரை ஏற்றுக் கொண்டான். இவைகளை குறித்து தானியேல் 3,4 ஆம் அதிகாரத்தில் எழுதப்பட்டி ருக்கிறது. அவன் ஆவியானவருக்கு செவிக்கொடுத்தான். பார்வோன் ராஜாவோ தன் இருதயத்தை கடினப்படுத்தினான். இரட்சிப்பை இழந்தான். நோவா காலத்திலே பல வருஷமாக ஆவியானவர் அந்த மக்களின் உள்ளத்திலே போராடினார். அவர்களோ அசட்டைப்பண்ணினார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். 2 பேதுரு 2.1

கள்ள போதகர்கள் இன்று தேவனுடைய ராஜியத்திற்கு போக விடாமல் தவறான போதனைகளை போதித்து மக்களை அழித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட போதகர்களுக்கு பயங்கர அழிவு காத்துக்கொண்டிருக்கிறது.

கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும் இரட்சிக்கப்படத்தக்கதாக சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை



விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப் படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். 2 தெச 2.10,11,12

ஆவியானவரின் உணர்த்துதலை நாம் அசட்டை செய்தோ மென்றால் பின் வரும் காலத்தில் நாம் பொய்யை நம்பி அழிவுக்குட்படுத்தப்படுவோம்.

யோவான் ஸ்நானகன் யூதர்களுக்கு பிரசங்கித்தான். அடுத்து கடவுளே இயேசு கிறிஸ்துவாக வந்து பிரசங்கித்தார். ஆனால் அந்த யூதர்களோ ஆவியானவருக்கு

செவிக்கொடாமலே போனார்கள். அவர்கள் அவர்களின் சபைகளை நேசித்தார்கள் பெறும் தெய்வமான அவர் பக்கத்தில் இருந்தபோது அவரை விட்டுவிட்டார்கள். இயேசு கிறிஸ்துவுக்கு விரோதமாக நாம் எதையாகிலும் சொன்னோம் என்றால் அது நமக்கு மன்னிக்கப் படுகிறது ஆனால் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக நாம் எதையாகிலும் சொன்னோம் என்றால் அந்த பாவத்திற்கு மன்னிப்பு இல்லை என்று நாம் ஜாக்கிரதையாக இருந்து அவர் சத்தத்திற்கு பக்தியாய் செவிகெடுப்போம். காலம் சமீபித்து விட்டது, நமக்கென்று இந்த உலகத்தில் ஒன்றுமில்லை திடிரென்று மரணம் நம்மை விழுங்கி நம்மை நியாயத் தீர்ப்புக்கு கொண்டுபோகும்முன் ஆண்டவரிடத்தில் பிரியமாயிருந்து அவரை நேசித்து யாவரும் அந்த பரலோகத்திலே காணப்படத்தக்கதாக பிரயாசிப்போம். இன்று உலகத்தில் நடக்கிற காரியத்தை பார்க்கிறோம். முடிவு வந்துவிட்டது என்று நடக்கிற சம்பவங்களே நம்மை எச்சரித்து வருகிறது. ஆண்டவர் நமக்காக மரித்தார் என்பதையும் அவர் நியாத்தீர்ப்பு கொடுக்கபோகிறார் என்பதையும் நாம் மறந்துபோககூடாது ஆமென்.




*__அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உமக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்.__* *2 கொரிந்தியர் 6. 2*